மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எவ்வளவு மானியம் என்கிற விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால் இரண்டு அரசுகளும் மானியம் கொடுக்கின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கிராமிய நல்வாழ்வு மற்றும் குடும்பநல நிறுவனம் முன்னாலே சொசைட்டி ஆக்ட்-ன் கீழ் இயங்கி வந்தது. பின்னாலே டிரஸ்ட் ஆக்ட்-ன் கீழ் அது மாற்றப் பட்டதினாலும், அங்கே பல்வேறு தவறுகள் நடைபெற்ற தாலும், அதனை அரசே ஏற்று நடத்த வேண்டுமென்று கிராமிய நல்வாழ்வு மற்றும் குடும்பநல நிறுவனத்தில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் ஒரு கோரிக்கை விடுத்திருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட செயற்குறிப்பு இல்லையென்று சொன்னார்கள். இதுவரை இப்படிப்பட்ட செயற்குறிப்பு அரசிடம் இல்லையென்றாலும் கூட இனிமேலாவது அதனை அரசு ஏற்று நடத்த முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலிலே கேட்ட கேள்விக்கு நான் அளித்த விடையை திருத்திக்கொள்கிறேன். மத்திய அரசு மானியம் மற்றும் தனியார் நிறுவனங்களின் மூலமாக அம்பாத்துறையில் கிராமிய நல்வாழ்வு மற்றும் குடும்பநல நிறுவனம் நடத்தப்பட்டு வருகிறது என்று என்னுடைய விடையை திருத்திக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் இனிமேலாவது அந்த நிறுவனத்தை அரசு ஏற்று நடத்துமா என்று கேட்டார்கள். ஏற்கெனவே இந்த நிறுவனத்தை மத்திய அரசு ஏற்று நடத்த வேண்டுமென்று கோரிக்கை விடுத் திருக்கிறார்கள். மத்திய அரசு மாநில அரசிடம் இதுபற்றி விளக்கம் கேட்டிருக்கிறது. தமிழக அரசு விளக்கம் எழுதி அனுப்பியதற்குப் பிறகு, மாநில அரசுதான் இதனை ஏற்று நடத்த வேண்டுமென்று மத்திய அரசு தெரிவித்தால் மாநில அரசே அதனை ஏற்று நடத்தும். ஆனால் அதற்கான முழு மானியத்தையும் மத்திய அரசே கொடுக்க வேண்டிவரும்.

விளாத்திகுளம் அரசு மருத்துவ மனை.

128—(*வினா எண். 7852) திரு. ச. குமரகுருபர ராம நாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விளாத்திகுளம் அரசு மருத்துவமனைக்கு அதிக படுக்கை வசதி, மேலும் இரு மருத்துவர்கள், பெண் மருத்துவர் வசதி ஆகியவை செய்யப்படுமா ?

1986 நவம்பர் 21]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் அரசு மருத்துவ மனையில் கூடுதல் படுக்கை வசதி, மேலும் உதவி அறுவை மருத்துவர்கள் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

திரு. ச. குமரகுருபர ராமநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் என்பது தாலுக்கா தலைநகர். அது அதிக மக்கள் தொகை கொண்ட ஒரு பகுதி. அங்கு ஒரே ஒரு அரசு மருத்துவமனை உள்ளது, அதிலும் படுக்கை வசதிகள் இல்லை. அதுசம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுத்து படுக்கை வசதி அதிகரிக்கப்படுமா? அது போல அங்கே நீண்டகாலமாக மருத்துவர்கள் இல்லாத நிலை இருக்கிறதே, அந்நிலை உடனடியாக போக்கப்படுமா ? உடனடியாக தேவையான மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் அரசு மருத்துவ மனை ஏற்கெனவே 50 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவ மனை. 25 படுக்கைகள் ஆண்களுக்கும், 25 படுக்கைகள் பெண் களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. அங்கு டாக்டர்கள் இல்லை யென்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார். அதைப்பற்றி அரசு நிச்சயமாக விரைவில் பரிசீலித்து ஆணை பிறப்பிக்கும்.

சிவகாசி அரசு மருத்துவ மனையில் பீடியாட்ரிக் வார்டு கட்டுதல்.

129—(*வினா எண். 7868) **திரு. வி. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி நகர் அரசு மருத்துவமனையில் 'யூனிசெப்' திட்டத்தின்கீழ் பீடியாட்ரிக் வார்டு கட்ட (குழந்தைகள் நல மையம்) அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டி முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை (ஆ) கேள்விக்கு இடமில்லை.